ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2139/25 - 2019 සැප්තැම්බර් මස 03 වැනි අඟහරුවාදා - 2019.09.03
*2139/25 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978* (x) *(அ).*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் பீவி 94112 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும், 2013.08.23 ஆந் திகதியன்று முதன் முதலாகப் பதிவுசெய்யப்பட்டதும், 2018.02.02 ஆந் திகதியன்று ஒன்றுசேர்க்கப்பட்டதும், கொழும்பு 04, பொன்சேக்கா இடம், 03 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளதுமான ஈசொப்ட் மெற்றோ கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், எந்தப் பட்டத்தின் சுருக்கீடு இதற்கான அட்டவணை* II *இன் நிரல்* II *இலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ளதோ, இதற்கான அட்டவணை* II *இன் நிரல்* I *இல் குறித்துரைக்கப்பட்ட அந்தப் பட்டத்தின் அளிப்புக்கு இட்டுச்செல்கின்றதும், அதன்கண் உயர் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்கானதுமான பட்டம் அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஈசொப்ட் மெற்றோ கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டை ஏற்றங்கீகரிக்கின்றேன்.*


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை I

*நிபந்தனைகள்*

1. ஈசொப்ட் மெற்றோ கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை கொழும்பு 04, பொன்சேக்கா இடம், 03 ஆம் இலக்கத்தில் மட்டுமே நடாத்துதல் வேண்டும்.

2. ஈசொப்ட் மெற்றோ கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், இக்கட்டளை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஐந்து (5) ஆண்டுகளினுள், நிறுவகத்தின் பெயரின்கீழ் பதிவுசெய்யப்பட்டவோர் அமைவிடத்தில், இக்கட்டளையின் கீழ் தாபிக்கப்படுவதற்கு நாடப்பட்ட நிறுவகம் தாபிக்கப்பட்டமை பற்றிய சான்றை, குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. ஈசொப்ட் மெற்றோ கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை, விதித்துரைக்கப்பட்ட ஐந்து (5) ஆண்டுகளினுள் சொல்லப்பட்ட பட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு அவர்களை இயலச்செய்து, மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதலுக்கமைய, இக்கட்டளை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஐந்து (5) ஆண்டுகாலப் பகுதியொன்றுக்காக மட்டும் முனைவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

4. ஈசொப்ட் மெற்றோ கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், மேற்கூறப்பட்ட ஐந்து (5) ஆண்டுகாலப் பகுதியினுள் சேர்ந்துகொள்கின்ற மாணவர்கள், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை சொல்லப்பட்ட ஐந்து (5) ஆண்டுகாலப் பகுதியினுள் பூர்த்திசெய்தல் வேண்டுமென்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. ஈசொப்ட் மெற்றோ கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படவுள்ள நிகழ்ச்சித்திட்ட மீள் பரிசீலனைக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை, முனைவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

6. ஈசொப்ட் மெற்றோ கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், தகவல் தொழில்நுட்பவியல் இளமாணி சிறப்புத் தொடர்பில், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது, க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே அமர்வில் மூன்று (3) ‘S’ சித்திகளென்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

## அட்டவணை II

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்திற்கான சுருக்கீடு |
|---|---|
| தகவல் தொழில்நுட்பவியல் இளமாணி சிறப்பு | பிஐரீ (சிறப்பு) |

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2019, ஒகத்து 30.

09-559

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.